**<u>உதவி அமர்வு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>எஸ்.சி.நெ.193/2014</u>**
**நாள் : 14/03/2024.**

இந்த நீதிமன்றத்து எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத்தரப்பு 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

பெயர் : அ.த.சா.1. திரு. காளியப்பன்
வயது :
த/பெ :
தொழில் :
மதம் :
விலாசம் :

**முதல் விசாரணை:-**

நான் புழல் கேம்பில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை என்க்கு தெரியாது. நான் பழைய பிளாஸ்டிக், பேப்பர், கடை நடத்தி வருகிறேன். 20.06.2008ல் நான் எனது பாக்கிட்டில் ரூ.200 வைத்திருந்தேன் அப்பேது மூன்று நபர்கள் பைக்கில் வந்தார்கள். அவர்கள் என் பாக்கிட்டில் இருந்த ரூ.200ஐ எடுத்து சென்றுவிட்டனர். நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் **ஆதசாஆ 1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் கடையை விடியகாலை 7.00 மணி, 8.00 மணிக்கு திறப்பேன். என்னை யார் மடக்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்கள் எந்த பைக்கில் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புழல் பிரிட்ஜ்க்கு மேலே ஆள் நடமாட்டம் இருக்காது என்றால் சரிதான். புழல் காவல் நிலைய எல்லையில் கடை நடத்தி வருவதால் போலிசார் என்னிடமிருந்து வெற்றுதாளில் கையொப்பம் கேட்டார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த

வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடமிருந்து பணம் எதுவும் எடுத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசாருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

உதவி அமர்வு நீதிபதி,
பொன்னேரி.